## மனிதவள மேம்பாடு :

நீண்டகால பயிற்சியின் கீழ் (Long Term Training) இந்நிறுவனத்தில் இரண்டு வருட கண் காது குறைபாடுகள் பற்றிய பட்டயப் படிப்பு நடத்தப்பட்டு வருகிறது. இப்படிப்பை NIEPMDல் முடித்து இந்தியாவின் வெவ்வேறான மாநிலங்களில் பணி புரிகின்றனர். திறமை வாய்ந்த ஆசிரியர்களால் இம்மாணவர்களுக்கு செயல்முறை மற்றும் கருத்தியல் வகுப்புகள் NIEPMDல் வழங்கப்படுகிறது. ஒரு மாத குறுகிய காலப் பயிற்சி மற்றும் ஐந்து நாட்கள் பயிற்சி (Short Term Training Programme) ஆகியவை காது மற்றும் கண்பார்வைக் குறைபாடு உடையவர்களுக்கான பயிற்சியாளர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு வழங்குவது எங்களின் தொடர்ச்சியான செயல்கள்.

## மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டம் (ADIP) :

பல பயனாளிகளுக்கு C.D. பிளேயர், பிரெய்ல் கடிகாரம், கையெழுத்து போட பயன்படும் பலகை, பிரெய்ல் சிலேட், கேன், கருப்புக் கண்ணாடி, டெய்லர்ஸ் கணக்கிடுதல் சட்டம் மற்றும் ஆரம்பகால பயிற்சிக்குத் தேவையான கருவிகள் ஆகியவை ADIP திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.





NIEPMD

### ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம்


(மாற்றுத்திறனாளி விவகாரங்கள் துறை, சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கல் அமைச்சகம், இந்திய அரசு)

கிழக்கு கடற்கரை சாலை, முட்டுக்காடு, கோவளம் அஞ்சல்,
சென்னை - 603 112. தமிழ்நாடு.

தொலை பேசி : 044-27472046, 27472113, தொலை நகல் : 044-27472389
மின் அஞ்சல்: niepmd@gmail.com, மின் அலை: www.niepmd.tn.nic.in

**வேலை நேரம்**
திங்கள்-வெள்ளி காலை 9 மணி முதல் மாலை 5.30 மணி வரை

**விடுமுறை**
சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் மத்திய அரசு விடுமுறை நாட்கள்






NIEPMD


### ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம்

(மாற்றுத்திறனாளி விவகாரங்கள் துறை, சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கல் அமைச்சகம், இந்திய அரசு)

கிழக்கு கடற்கரை சாலை, முட்டுக்காடு, கோவளம் அஞ்சல்,
சென்னை - 603 112. தமிழ்நாடு

தொலை பேசி : 044-27472046, 27472113, தொலை நகல் : 044-27472389
மின் அஞ்சல்: niepmd@gmail.com, மின் அலை: www.niepmd.tn.nic.in

**வேலை நேரம்**
திங்கள்-வெள்ளி காலை 9 மணி முதல் மாலை 5.30 மணி வரை

**விடுமுறை**
சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் மத்திய அரசு விடுமுறை நாட்கள்


மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் சிறந்த இணையதளம் (வெப்சைட்) உருவாக்கியதற்கான தேசிய விருது (2011) மற்றும் மாற்றுத் திறனாளிகள் எந்த தடையும் இன்றி செல்லும் வகையில் சிறந்த கட்டமைப்பை ஏற்படுத்தியதற்காக தேசிய விருது (2012) பெற்ற நிறுவனம்.

## சமூகத்தில் காது மற்றும் கண் பார்வை குறைபாட்டை எப்படி அறிந்துகொள்ள முடியும்?

ஐம்புலன்களில் செவித்திறன் பாதிப்புடன் பார்வை குறைபாடும் சேர்ந்து காணப்பட்டால், இவர்களை காது மற்றும் கண் பார்வைக் குறையுடையவர்கள் (Deafblind) என கூறப்படுகிறது. இவர்கள் உலகத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் தனிமையில் ஆழ்ந்து விடுகின்றனர். இவர்களுக்கு மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளவோ, தன்னைச் சுற்றி இருக்கும் பொருட்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவோ, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு செல்வதற்கு சிரமமாக இருக்கும். சில சமயம் இவர்களுக்கு மூளை முடக்குவாதம், மனவளர்ச்சி குறைபாடு, ஆட்டிஸம் இவைகளில் ஏதாவது ஒரு குறைபாடுடன் சேர்ந்து காணப்படலாம்.

உங்கள் குழந்தை உங்களை ஒரு தடவை கூட பார்க்காமல் இருந்தாலோ அல்லது சப்தங்களை கேட்காமல் இருந்தாலோ இவர்களுக்கு காது மற்றும் கண் பார்வைக் குறைபாடு (Deafblind) இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது. இவர்களுக்கு எதிலும் பங்கேற்பதற்கு ஆர்வம் கிடையாது.

## வகுப்பறையின் நோக்கங்கள் :

தன்னிச்சையான வாழ்க்கைத் திறன்களை இயற்கையான வாழ்க்கைச் செயல்பாடுகளைக் கொண்டு வளர்க்கவும், தொடர்பு கொள்ளும் திறன்கள் மற்றும் படித்தல், எழுதுதல், கணக்கிடுதல் போன்றவற்றின் மூலமும் தொடு உணர்வு (Touch), சைகை மொழி (Sign Language), பிரெய்ல், பிரெய்லர், ஃப்யூசர் கொண்டு உருவாக்கப்பட்ட மேலெழும்பிய படங்கள் (Raised pictures), மற்றும் டெய்லர்ஸ் கணக்கிடுதல் சட்டம் போன்றவற்றைக் கொண்டு மேம்படுத்துதல்.

எஞ்சியுள்ள பார்வை, கேட்டல், தொடுதல், நுகர்தல், சுவை, வெஸ்டிபுளார், கைனஸ்தெடிக் உணர்வுகள் மற்றும் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்வதற்கான நுணுக்கங்களான, கேன், ப்ரீ-கேன், பார்வையுள்ளவரின் துணையுடன் நடக்கும் பயிற்சியைப் பயன்படுத்தி ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லும் திறன்களை வளர்க்கலாம்.



## தற்காலிக நுணுக்கங்கள் மற்றும் பண்டைய கால தீர்வுகளின் சங்கமம்.

யோகிகள் ருத்ராட்சத்தை புனிதப் பொருளின் அடையாளமாக பயன்படுத்தினார்கள். ஆனால் நாங்கள் அவற்றை இணைப்புகளில் அழுத்தம் கொடுத்து உடல் ஸ்வரூபம் (Body image) வளர்க்கவும், தேவைக்கு அதிகமான துறுதுறு தன்மையைக் குறைக்கவும் பயன்படுத்துகிறோம். புதினெட்டு மூலிகைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட மூலிகைப் பொடியினை பயன்படுத்திக் கொடுக்கக்கூடிய மசாஜ் சிகிச்சை, காது மற்றும் கண்பார்வைக் குறையுள்ளவர்களுக்கு (Deafblind) உடல் ஸ்வரூபத்தை வளர்க்கப் பெரிதும் உதவுகிறது. ரெசனன்ஸ் பலகை என்பது ஒரு சிறிய மரத்துண்டு. இது ஆரம்பகால பயிற்சிக்கு ஒரு முக்கிய கருவியாகப் பயன்படுகிறது. வெவ்வேறான தொடு உணர்வுகளை தூண்டும் தொடு பொருட்கள் (Different textures) மற்றும் பலகைகள் தொடு உணர்வைத் தூண்டப் பயன் படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட உணர்வுகளின் ஒருங்கிணைப்பு முறையானது உணர்வுகளை ஒருங்கிணைக்க உதவுகிறது. பல்துறை சார்ந்த நிபுணர்களான இயன்முறை சிகிச்சையாளர் (Physiotherapist), தொழில்முறை சிகிச்சையாளர் (Occupational Therapist), பேச்சுப் பயிற்சியாளர் (Speech Therapist), சிறப்பு ஆசிரியர் (Special Teacher) மருத்துவர் ஆகியோருடன் கைகோர்த்து ஒரு பயனுள்ள இளைஞனாக காது மற்றும் கண் பார்வைக் குறையுடையவரை மேம்பாடு அடையச் செய்யலாம். Jaws எனப்படும் பேசும் கணினி நன்கு செயல்படக்கூடிய கண் பார்வையின்மை மற்றும் காது கேளாதோர்க்கு கல்வி அளிக்கப் பயன்படுகிறது. மேலும் சுய வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள தொழில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

## பரிசோதனை :

ஒன்றுக்கு மேற்பட்ட உணர்வு குறைபாடு (Deaf blind) உடையவர்களை பரிசோதனைச் செய்ய விரைவான பரிசோதனை முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு குழந்தையை கவனித்து நாம் என்ன தெரிந்து கொள்கிறோம், குழந்தை என்ன செய்கிறது, அந்தச் செயலை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு நாம் என்ன செய்ய போகிறோம் என்ற இந்த மூன்று கேள்விகளும் ஒரு குழந்தையின் தனிப்பட்டக் கல்வி பாடத்திட்டத்தை அமைக்க பெரிதும் உதவுகிறது. இக்குழந்தைகளின் கண்பார்வை, கேட்கும் திறன் மற்றும் அனைத்து உணர்வுகளையும் பரிசோதித்து அறிந்து கொள்ள புதுமையான முறைகள் (innovative methods) பயன்படுத்தப்படுகின்றன.

## ஆராய்ச்சி :

காது மற்றும் கண் பார்வைக் குறைபாட்டின் காரணத்தை நுண் வேதிமுறைகள் மற்றும் பிற கண்டறியும் கருவிகளைக் கொண்டு ஆராய்தல், எங்கள் ஆராய்ச்சித் திட்டங்களில் ஒன்றாகும். ஆராய்ச்சியின் முடிவுகள் ஒன்றுக்கு மேற்பட்ட ஊனத்தை தவிர்க்க பல்வேறு முறைகளில் பயன்படுத்தப்படும்.

